**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.385/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.5 |
| Name | : | சரண்குமார் |
| Father's Name/Husband Name: | | மகேந்திரன் |
| Village | : | செஞ்சேரி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 22/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.06.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி வெள்ளைச்சாமி ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கல்லூரியில் படித்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். சுமார் 2ல் இருந்து 3 மாதங்களுக்கு முன்பு நானும் என்னுடைய நண்பன் மாதேஸ்வரன் என்பவரும் அ.சா.1ன் வீட்டிற்கு சென்றபோது அங்கு கூட்டமாக இருந்தது. என்னவென்று விசாரித்தபோது குடும்ப பிரச்சனை காரணமாக எதிரி இருச்சக்கர வாகனத்தை சேதப்படுத்தியதாக சொன்னார்கள். போலிசார் எங்கள் இருவரையும் சாட்சிகளாக இருக்க கேட்டார்கள், ஒத்துக் கொண்டோம்.

எங்கள் இருவர் முன்னிலையில் போலிசார் சண்டை நடந்த இடத்தை பார்த்து படம் வரைத்து எழுதி எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான்.

பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த இடத்தில் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள், என்றால் பழைய பஸ் ஸ்டேண்டில் உள்ள குரு ே◌ஹாட்டலுக்கு பின்புறம் போலிசார் விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணை செய்த தேதி, மாதம், நேரம் என்ன என்றால் மாலை 07.00 மணி இருக்கும், தேதி, மாதம் ஞாபகமில்லை. என்னை விசாரணை செய்த போலிசார் ஆய்வாளரா, உதவி ஆய்வாளரா என்றால் உதவி ஆய்வாளர் அவருடைய பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்ற தாள் வெற்றுத்தாளாக இருந்ததா அல்லது எழுதப்பட்டியிருந்தா என்றால் எழுதப்பட்டியிருந்தது. நான் சொல்ல சொல்ல போலிசார் என்னிடம் எழுதி கையொப்பம் பெற்றார்கள். நான் எத்தனை கையொப்பம் போட்டேன் என்றால் ஒரு கையொப்பம் போட்டேன். மீண்டும் ஒரு வாரம் கழித்து போலிசாரிடம் காவல் நிலையத்தில் வைத்து ஒரு கையொப்பம் போட்டேன். நான் சொல்வது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், போலிசார் வரைபடம் எதுவும் வரையாமல் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றாலும், அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.